*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*18 10 2026 SUNDAY - 7 15 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

**தலைப்புச் செய்திகள்**

1. ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ள இந்திய அணியினர் வெற்றிபெற பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.
2. இளையோரை தவறாக வழிநடத்த தேச விரோத சக்திகளும், சில அரசியல் கட்சிகளும் முயற்சிப்பதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு குற்றம் சாட்டியுள்ளார்.
3. மஹாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.
4. ஈரானுடான வர்த்தகம், இரண்டு வழித்தடங்களில் தற்காலிகமாக நிறுத்தப்படுவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.
5. Budapest சர்வதேச செஸ் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>><<<<<<<

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றுள்ள இந்திய அணியினர் வெற்றிபெற பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், நமது பாரா வீரர்களின் திறனை கண்டு நாடு பெருமிதம் கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

அவர்களின் விடாமுயற்சி மற்றும் அர்ப்பணிப்பு, நாட்டு மக்கள் அனைவருக்கும் உந்து சக்தியாக இருக்கும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

முன்னதாக, ஆசிய பாரா விளையாட்டு போட்டிகள் வண்ணமிகு கலைநிகழ்ச்சிகளுடன் இன்று ஜப்பானில் தொடங்கின.

Nagoya-வில் உள்ள Paloma Mizuho மைதானத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் வீரர்கள் அணிவகுப்பில் இந்தியாவின் சார்பில் தேசியக்கொடியை பிரமோத் பகத்தும், சிமரன் சர்மாவும் ஏந்திச் சென்றனர்.

வரும் 24ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இப்போட்டியில் 45 நாடுகளைச் சேர்ந்த மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

இந்தியா சார்பில் 168 பேர் இதில் கலந்து கொண்டுள்ளனர்.

>>>>>>><<<<<<<

மேற்குவங்கத்தில் துர்கா பூஜையின் போது நேரிட்ட கூட்ட நெரிசலில் சிக்கி காயமடைந்தவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் அம்மாநில அரசு வழங்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து தாம் ஆறுதல் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, இந்த கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட 7 பேர் நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

>>>>>>><<<<<<<

மத்திய அரசின் சாதனைகளை பிஜேபியினர் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்று நாக்பூரில் கட்சி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மஹாராஷ்ட்ரா அரசின் சாதனைகளையும் எடுத்துரைக்குமாறு வலியுறுத்தினார்.

மக்கள் நலனுக்காக மத்திய அரசும், மஹாராஷ்ட்ரா அரசும் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதாக திரு. நிதின் கட்கரி தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மத்திய தொழிலக பாதுகாப்பு படை நிர்வாக அமைப்பில் பெரிய அளவில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இது, அடுத்த மாதம் 1ஆம் தேதி முதல் செயல்பாட்டிற்கு வரும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

துறை வாரியாக பாதுகாப்பு பணிகளை மேற்கொள்வதற்கான நெறிமுறைகளும், கண்காணிப்பு நடைமுறைகளும் இந்த மாற்றங்களில் அடங்கும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

பிரான்ஸ் மற்றும் பங்களாதேஷில் நடைபெற்ற போராட்டங்களைப் போல், இந்தியாவிலும் நடத்த தேசவிரோத சக்திகள், சில அரசியல் கட்சிகளோடு சேர்ந்து முயற்சிப்பதாக மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜூ குற்றம் சாட்டியுள்ளார்.

புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இந்த சதி திட்டத்தை தீட்டியவர்கள், இந்தியாவில் இது வெற்றிபெறாது என்பதை உணரவில்லை என்று குறிப்பிட்டார்.

இளைஞர்களை தவறாக வழிநடத்தவும் அவர்கள் முயற்சி மேற்கொண்டதாக அமைச்சர் கூறினார்.

தேர்தல் வாயிலாகத் தான் புதிய அரசை அமைக்க இயலும் என்றும், போராட்டங்களால் முடியாது என்றும் திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

தேர்தல் ஆணையத்திற்கு எதிராக, காங்கிரஸ் கட்சி தவறான குற்றச்சாட்டுகளை தெரிவித்து வருவதாக பிஜேபி குறை கூறியுள்ளது.

தெலங்கானா மாநிலம், ஹைதராபாதில் அம்மாநில பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. *N.V. Subhash* செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில், காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளை மக்கள் நிராகரித்துள்ளதாக கூறினார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவராக திரு. ராகுல் காந்தி முறையாக செயல்படவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

திரு. ராகுல் காந்தி வெளிநாட்டு பயணங்களின் போது, இந்தியாவுக்கு எதிராக கருத்துக்களை தெரிவித்து வருவதாகவும், இது ஏற்புடையதல்ல என்றும் திரு. *N.V. Subhash* தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு கஷ்மீர் மற்றும் லடாக் உயர்நீதிமன்றத்தின் லடாக் கிளையை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் இன்று திறந்து வைத்தார்.

இதன்மூலம் லடாக் மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளதாக அதன் துணைநிலை ஆளுநர் திரு. வினெய்குமார் சக்சேனா கூறியுள்ளார்.

நீதித்துறையின் சேவைகள் மக்களுக்கு எளிதாக கிடைப்பதை இது உறுதி செய்யும் என்றும் சமூகவலைதளத்தில் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

மகளிரின் வலிமைக்கு துர்கா பூஜை புத்துயிர் அளிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

துர்கா பூஜை கொண்டாடப்படுவதை ஒட்டி சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மகிஷாசூரனை வதம் செய்த துர்கா தேவியின் வெற்றியை கொண்டாடும் வகையில் இந்த பூஜை நடத்தப்படுவதாக குடியரசுத்தலைவர் கூறியுள்ளார்.

>>>>>>><<<<<<<

தில்லியில் யமுனை ஆற்றை தூய்மைப்படுத்தும் பணியில், முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா மற்றும் அவரது அமைச்சரவை சகாக்கள் ஈடுபட்டனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி. ரேகா குப்தா, இப்பணியில் பொதுமக்கள் அனைவரும பங்கேற்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

யமுனை ஆற்றை தூய்மையாக பராமரிக்க அனைவரும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

பிளாஸ்டிக் கழிவுகளை ஆற்றில் வீசுவதை தவிர்க்க வேண்டும் என்றும் திருமதி. ரேகா குப்தா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

ராஜஸ்தானில் மகளிர் பாதுகாப்பிற்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா கூறியுள்ளார்.

இன்று ஜெய்ப்பூரில் மகளிர் பாதுகாப்பிற்கென காவல்துறை கண்காணிப்பு வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்த சேவையில் பணிபுரியும் பெண் காவலர்களுக்கான பயணப்படி சலுகையையும் அவர் அறிவித்தார்.

மகளிர் அச்சமின்றி பாதுகாப்பாக தங்களது பணிகளை மேற்கொள்ள இந்த சேவை உதவிகரமாக இருக்கும் என்று திரு. பஜன்லால் சர்மா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

உத்ராகண்டில் விளையாட்டுத்துறை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக அம்மாநில முதலமைச்சர் திரு. புஷ்கர்சிங் தாமி கூறியுள்ளார்.

*Banbasa*-வில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சர்வதேச விளையாட்டு போட்டிகளில் பதக்கங்களை வெல்லத்தக்க வகையில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

இந்த வசதிகளை இளையோர் முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் திரு. புஷ்கர்சிங் தாமி கேட்டுக் கொண்டார்.

>>>>>>><<<<<<<

மஹாராஷ்ட்ராவில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

*Majalgaon* தாலுகாவுக்கு உட்பட்ட தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த கார், எதிரே வந்த பேருந்து மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

>>>>>>><<<<<<<

ஈரானுடன் இரண்டு முக்கிய வழித்தடங்களில் மேற்கொள்ளப்படும் வர்த்தகம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படுவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

*Balochistan* மாகாணத்திற்கு உட்பட்ட இந்த வழித்தடங்கள் வர்த்தகத்திற்கு மூடப்படுவதாக பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் மற்றும் கடத்தலை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

>>>>>>><<<<<<<

ரஷ்யா மீது பெரிய அளவிலான ட்ரோன் தாக்குதலை யுக்ரைன் இன்று நடத்தியுள்ளது.

ரஷ்யாவில் உள்ள முக்கியப் பகுதிகளை குறிவைத்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட ட்ரோன்களை பயன்படுத்தி இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த தாக்குதலில் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் உள்ள எண்ணெய் ஏற்றுமதி முனையம் தீப்பற்றிய எரிவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருப்பினும், யுக்ரைனின் ட்ரோன் தாக்குதல் வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக ரஷ்யா கூறியுள்ளது.

யுக்ரைனுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அந்நாட்டின் மீது ரஷ்யா நடத்திய தாக்குதலில் ஒருவர் உயிரிழந்தார்.

>>>>>>><<<<<<<

*Budapest* சர்வதேச செஸ் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கம் வென்றது.

*Dinesh Rajan* தங்கப்பதக்கத்தையும், *Srihari* மற்றும் *Nitul Khare* வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

>>>>>>><<<<<<<

இந்தியா - ஜிம்பாப்வே இடையேயான இரண்டாவது மகளிர் டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி சற்றுமுன் ராய்ப்பூரில் தொடங்கியது.
இப்போட்டியில், டாஸ் வென்ற ஜிம்பாப்வே முதலில் பேட் செய்து வருகிறது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றி பெற்று இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

>>>>>>><<<<<<<

அமெரிக்காவின் *Las Vegas*-ல் நடைபெற்று வரும் *23* வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Jaskaran* மற்றும் *Chandra Mohan* வெண்கலப் பதக்கத்திற்கான ஆட்டத்தில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளனர்.

>>>>>>><<<<<<<

உத்ராகண்ட் அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில், தமிழக அணி வலுவாக உள்ளது.

சென்னையில் இன்று தொடங்கிய இப்போட்டியின் ஆட்டநேர இறுதியில் தமிழகம் முதல் இன்னிங்ஸில் *2* விக்கெட் இழப்புக்கு *85* ரன் எடுத்துள்ளது.
முன்னதாக, முதலில் பேட் செய்த உத்ராகண்ட் அணி, முதல் இன்னிங்ஸில் தொடக்க முதலே விக்கெட்டுகளை இழக்கத் தொடங்கி *134* ரன்னுக்கு ஆட்டமிழந்தது.
அதிகபட்சமாக *Avneesh Sudha 54* ரன் எடுத்தார். *Sai Kishore* மற்றும் *Gurjapneet Singh* தலா *4* விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

>>>>>>><<<<<<<

*Fenesta* ஓப்பன் டென்னிஸ் போட்டியில், ஹரியானாவின் *Khushi Kadian* பட்டம் வென்றார்.

புதுதில்லியில் நடைபெற்ற இப்போட்டியின் *16* வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பட்டத்தை கைப்பற்றினார்.

>>>>>>>END<<<<<<<